சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் புதிய வீடுகள் கட்டித் தருதல் – அரசு சாரா மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் புதிய வீடுகள் கட்டப்படாமல் விடுபட்ட வீடுகளைக் கட்டுவதால்.

---

வருவாய் (இ இ.2) துறை

அரசாணை (நிலை) எண் 625 நாள் 20.9.2006

பார்வை:

1. அரசாணை (நிலை எண்.172, வருவாய் (என் சி.1) துறை, நாள் 30.03.2005.
2. தன்னார்வத் தொண்டுகளால் வீடுகட்டித் தரும் பணி திரும்பப் பெறப்பட்ட சில மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியர்களின் அறிக்கை.
3. ஊரக வளர்ச்சித் துறை, திட்ட அலுவலர் அவர்களது நேர்முகக் கடிதம் எண்.1273/06/அ4, நாள் 26.7.06.
4. முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரது நேர்முகக் கடித எண்.டி.ஆர்.ஆர்2/45061/2006, நாள் 08.09.2006. ஒன்பது கடலோர மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டது.
5. முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரது நேர்முக கடித எண்.டி.ஆர்.ஆர்.2/45061/2006, நாள்15.09.2006.

**ஆணை**

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சம்மதம் தெரிவித்தன. ஆனால் சில இடங்களில் நிதி தட்டுப்பாடு மற்றும் இதர காரணங்களுக்காக, சில தொண்டு நிறுவனங்கள் தங்களது சம்மதத்தினை திரும்பப் பெற்றுக் கொண்டதாகவும் அத்தகைய வீடுகளை அரசே கட்டலாம் எனவும் சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிக்கை அனுப்பினர். இதன் மீது கடந்த 24.06.2006 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்களின் ஆய்வுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

“ஒரு சில இடங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்ட முன்வராத வீடுகளை அரசே கட்டலாம் “

பார்வை 1-ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முன்வராத சூழ்நிலையில் அரசே வீடுகளைக் கட்டித் தரலாம் என்று பொதுவான ஆணை வெளியிடப்பட்டது. சுனாமியால் பாதிப்பு அடைந்த வீடுகள் 325 சதுர அடியில் தலா ரூ.15 இலட்சம் செலவில் கட்டலாம் என்று ஏற்கனவே ஆணை வெளிடப்பட்டது 20.06.07 விலை விவரப்படி 325 சதுர அடியில் இயற்கைச் சீற்றங்களைத் தாங்கக்கூடிய தொழில் நுட்பத்துடன் வீடுகள் கட்ட ஏறத்தாழ ரூ.2.10 இலட்சம் வரை தேவைப்படலாம் என்று ஊரக வளர்ச்சித் துறை தெரிவித்துள்ளது.

2. மாவட்ட ஆட்சியர்களின் அறிக்கைகளின்படி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கட்டப்படாமல் விடுபட்ட 2920 வீடுகள் கீழே குறிப்பிட்டுள்ளபடி ஐந்து மாவட்டங்களில் அரசால் கட்டப்பட வேண்டும்.

| | |
|---|---|
| நாகப்பட்டினம் | 2054 |
| காஞ்சிபுரம் | 226 |
| திருவள்ளூர் | 306 |
| விழுப்புரம் | 90 |
| திருநெல்வேலி | 244 |
| **மொத்தம்** | **2920** |

இந்நிலையில் பார்வை 5-ல் கண்ட தமது கடிதத்தில் மேற்கூறியவாறு கட்டப்படாமல் விடுபட்ட வீடுகளை அரசால் கட்டித் தர இயலும் வகையில் ஆணை பிறப்பிக்குமாறு முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கருத்துரு அரசால் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்குறிப்பிட்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

(அ) ஆரம்பத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டு பின்பு தன்னார்வ நிறுவனங்களால் கட்டப்படாமல் உள்ள சுமார் 3000 வீடுகள் ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வு நிதி ஒதுக்கீட்டிலிருந்து (Rajiv Gandhi Package for Tsunami Relief) கட்ட அரசு அனுமதி வழங்குகிறது.

(ஆ) 325 சதுர அடி பரப்பில் 2006-07ஆம் ஆண்டு விலைப்புள்ளி பட்டியல் (Schedule of rates) பின்பற்றி ஒரு வீடு ரூ.2.10 இலட்சத்திற்கு மிகாமல் கட்டப்பட வேண்டும். இவ்வீடுகள் ஏற்கனவே வரையறுக்கப்பட்ட தொழில் நுட்ப வரைமுறைகளுக்குட்பட்டு, அனைத்து இயற்கை சீற்றங்களையும் தாங்கக் கூடிய வீடுகளாக கட்டப்பட வேண்டும்.

(இ) இவ்வீடுகளைத் தவிர மேலும் சில இடங்களில் இதுபோன்ற வீடுகள் கட்டும் அவசியம் ஏற்படுமானால், அவைகளைக் கட்டுவதற்கு அனுமதி வழங்க முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(ஈ) மேற்குறிப்பிட்ட சுமார் 3000 வீடுகளைக் கட்ட ஆகும் செலவுத் தொகையாக ரூ.63 கோடி (ரூபாய் அறுபத்து மூன்று கோடி மட்டும்) (2.10 இலட்சம் X 3000) மைய அரசின் நிதி உதவியோடு மேற்கொள்ளப்படும் ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்ட நிதியிலிருந்து செலவிட அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

(உ) மேலே அனுமதிக்கப்பட்ட தொகையினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு அரசு கருவூலகத்திலிருந்து எடுத்து வழங்க முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3(ஈ) இல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

2216 வீட்டு வசதி – 80. பொது – 800 ஏனைய செலவு பத்தாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம் – JN சுனாமி புனரமைப்புப் பணிகள் 09 உதவி மானியங்கள் – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள். (து.தொ.கு.2216. 80. 800 JN 0938)

5. இவ்வாணை நிதித்துறை அலுவல் சாரா குறிப்பு எண்.59363/வருவாய்/06, நாள் 20.09.2006 இன்படி வழங்கப்படுகிறது.

(ஆளுநர் அவர்களின் ஆணைப்படி)

எஸ். ஆதிசேஷய்யா
அரசு செயலாளர்.